குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி. எண். 43/2020

PW1- சதீஸ் த/பெ.பாபு
தேதி- 04.02.2021
பக்க எண்- 1
முதல் விசாரணை

என் பெயர் சதீஸ். என் தந்தை பெயர் பாபு. நான் சிட்டி யூனியன் வங்கி தாரமங்கலம் கிளையில் கிளை மேலாளராக உள்ளேன். புகார்தாரர் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். அவரது கணக்கு எண். 500101010738822 ஆகும். 28-09-2018-தேதியில் புகார்தாரர் எங்கள் வங்கியில் ஒரு காசோலையை செலுத்தினார். மேற்படி காசோலை ஆக்ஸிஸ் வங்கி செரிரோடு கிளை உடையதாகும். அசல் காசோலையை தான் எங்கள் வங்கியில் செலுத்தியிருந்தார். மேற்படி காசோலையில் ரூபாய் ஏழு லட்சத்திற்கு தொகை நிரப்பப்பட்டிருந்தது. மேற்படி காசோலை பேமெண்ட் ஸ்டாப்ட் பை டிராயர் என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. **மேற்படி காசோலையின் ஸ்கேன் காப்பி தாக்கல் செய்கிறேன். அது வாசாஆ 1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அசல் காசோலையை புகார்தாரரிடம் எங்கள் வங்கி திருப்பி கொடுத்துவிட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எனது வங்கி ஆவணங்களை பொறுத்து சாட்சியம் அளிக்கிறேன். அசல் காசோலையில் ஏதேனும் திருத்தம் செய்திருந்தால் அது காசோலையின் ஸ்கேன் காப்பியிலும் காணப்படும். அசல் காசோலையில் நிரப்பப்பட்டுள்ள சங்கதிகள் வேறு வேறு நிற மையினால் நிரப்பப்பட்டிருந்தால் அது ஸ்கேன் காப்பியில் தெரியாது என்றால் சரியல்ல. பிரிண்ட் எடுத்தால்தான் அவ்வாறு தெரியாது. ஸ்கேன் செய்யும்போது அசல் காசோலையில் எவ்வாறு காணப்படுகிறதோ அதே நிற மையில் அவ்வாறே தெரியும். அசல் காசோலையில் பிளேடினாலோ, அல்லது ரப்பரினாலோ, காசோலையில் காணப்படும் சங்கதிகளை அழித்து திருத்தம் செய்தால் அது ஸ்கேன் காப்பியில் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். அசல் காசோலையின் குறைபாடுகள் எதனையும் கவனிக்காமல் ஸ்டாப் பேமெண்ட் பை டிராயர் என்ற காரணத்தை வைத்து மட்டுமே எங்கள் வங்கியில் காசோலையை திருப்பி உள்ளோம் என்றால் சரியல்ல, எதிரி வங்கிக்கு காசோலையின் ஸ்கேன் காப்பியை அனுப்பி எதிரி வங்கியில் கூறப்பட்ட காரணமான ஸ்டாப் பேமெண்ட் பை டிராயர் என்பதற்காக காசோலையை எங்கள் வங்கி திருப்பியது. அசல் காசோலையை திருப்பிய பின்னர் அதை புகார்தாரர் பெற்றுக்கொண்டாரா என்பது பற்றி எங்கள் வங்கியில் அறிந்து கொண்டோமா என்றால் பேர்லேண்ட்ஸ்ஸில் உள்ள எங்கள் வங்கிக்கு திருப்பப்பட்ட காசோலைகளை அனுப்பிவிடுவோம். அங்கு தான்

எஸ்.டி.சி. எண். 43/2020

PW1- சதீஸ்  த/பெ.பாபு
தேதி- 04.02.2021
பக்க எண்- 2
குறுக்கு விசாரணை

காசோலைகளை வசூலுக்கு செலுத்துபவர்கள் திரும்ப பெற்றுக்கொள்வார்கள். இதுவே நடைமுறையில் உள்ளது. வழக்கு காசோலையின் அசலானது தொலைந்துவிட்டதா அல்லது வேறு ஏதேனும் வங்கியில் செலுத்தப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலையின் அசலானது திருத்தப்பட்டு பின்னர் தான் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளது என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்படுகிறது. )

(மறு விசாரணை இல்லை)

ஒம்/ எம்.ஏ.சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.